## சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி
## SESSION CASE NO.106/2023

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் நாள் புதன் கிழமை

அ.சா.15 (பட்டியல் சாட்சி–18) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கோபிநாத் | த/பெ.: | பரமசிவம் |
| கிராமம்: | திருச்சி | தாலுக்கா: | திருச்சி |
| மதம்: | இந்து | தொழில்: | காவல் உதவி ஆய்வாளர், ராம்ஜி நகர். |
| வயது: | 50 | முகவரி: | திருச்சி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 24.09.2025

**முதல் விசாரணை :–**

நான் தற்பொழுது திருச்சி மாவட்டம் ராம்ஜி நகர் காவல் நிலையத்தில், உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.02.2022–ம் தேதி காலை 9.00 மணிக்கு திருத்துறைப்பூண்டி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது பாமணி பாரதியார் தெருவை சேர்ந்த சுப்பிரமணியன் மகன் மாரிமுத்து என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகாரை பெற்று நிலைய குற்ற எண். 87/2022 பிரிவுகள் 174, கு.வி.மு.ச. படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும். பின்னர் இந்த வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்காக ஆய்வளாரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

காவல் நிலையத்தில் தினசரி நாட்குறிப்பு பராமரிக்கும் வழக்கம் உண்டா என்றால் உண்டு. போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டர் 567–ன் படி சம்பவ நாளில் நான்

பணியில் இருந்தேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அன்றைய தேதியில் காவல் நிலையத்தில் பொது நாட்குறிப்பில் நான் பணியில் உள்ளதை குறிப்பிட்டு இருக்கும் தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். சம்பவம் நடந்த மறுநாள் தான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். புகார் கொடுக்கும் போது எதிரி லோகேஷ் என்பவர் இறந்து போன சந்தியா என்பவரிடம் செல்போனில் பேசியது தொடர்பாக ஆவணங்கள் ஏதேனும் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு எப்பொழுது அனுப்பப்பட்டது என்றால் 03.03.2022 . புகார் கொடுக்கும்போது காவல் நிலையத்திற்கு யார் வந்தார் என்றால் மாரிமுத்து என்பவர் வந்து புகார் கொடுத்தார். புகாரில் சந்தேகத்திற்கு உட்பட்ட நபர் என்று தான் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு அது சம்பந்தமான சாட்சிகளை விசாரணை செய்தேனா என்றால் இல்லை. மேற்படி குற்ற வழக்கு சம்பந்தமாக யாரையும் விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் , புகார் தாரர் கொடுத்த புகாரை பெற்று வழக்கு பதிவு செய்தால் தான் விசாரணை செய்யமுடியும். புகார்தாரர் காவல் நிலையத்தில் வைத்து புகார் எழுதி கொடுத்தாரா என்றால் ஏற்கனவே கைப்பட எழுதி என்னிடம் கொடுத்தார், நான் அதன்படி வழக்கு பதிவு செய்தேன். நான் சொல்வது போல் சொன்ன தேதியில், இடத்தில் எந்தவித சம்பவமும் நடக்க

வில்லை என்றும், இந்த குற்ற வழக்கிற்கும், எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை:–**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.